தூய பனிமய அன்னைப் பேராலயம், தூத்துக்குடி - வாரம் *206*

ஞாயிறு அறிவிப்புகள் - 2023 மே 21 – விண்ணேற்பு பெருவிழா

திருமண அறிக்கைகள்

எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் *115*
நமது பங்கு, செபமாலை மாதா அன்பியத்தைச் சேர்ந்த
தந்தை: துஷ்யந்தன் ஃபர்னான்டோ தாய்: ஹெல்லட் கொரேரா இவர்களின்
மகன்: ஆஷிக் சித்து வுக்கும்,

நமது பங்கு, கிறிஸ்தரசர் அன்பியத்தைச் சேர்ந்த
தந்தை: ரமேஷ் ஃபர்னான்டோ தாய்: டொரி ஃபர்னான்டோ இவர்களின்
மகள்: ஸ்டானி ராஃபியா வுக்கும்
திருமணம் நடைபெறவுள்ளது. இது மூன்றாவது அறிக்கை.

- திருமண அறிக்கைகள்: மே 07, 14, 21
- திருமண நாள்: 24.05.2023 புதன், பனிமய அன்னை பேராலயம

எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் *116*
நமது பங்கு, பொம்பெயி மாதா அன்பியத்தைச் சேர்ந்த
தந்தை: டிஃபோர் ஃபர்னான்டோ தாய்: ஜூலியட் கோமஸ் இவர்களின்
மகன்: மாஷியோ வுக்கும்,

தூத்துக்குடி, பாத்திமா நகர் பங்கைச் சேர்ந்த
தந்தை: விக்டர் ஃபர்னான்டோ தாய்: ஹெலன் ஃபர்னான்டோ இவர்களின்
மகள்: ஜெஃப்ரினா வுக்கும்
திருமணம் நடைபெறவுள்ளது. இது முதல் அறிக்கை.

- திருமண அறிக்கைகள்: மே 21, 28, ஜூன் 4
- திருமண நாள்: 09.06.2023 வெள்ளி, பனிமய அன்னை பேராலயம்

இத்திருமணங்களில் ஏதேனும் விக்கினம் இருந்தால், பங்குத் தந்தையிடம் தெரிவிக்க வேண்டியது உங்களின் கடமையாகும்.

****

1. இந்த வாரம் முழுவதும் வாசகம், இறைபுகழ்ச்சி வழியாகத் திருப்பலிகளைச் சிறப்பித்த சூசையப்பர் அன்புச் சமூக உறுப்பினர்களுக்கு நமது பாராட்டுகள். நாளை 22.05.2023 திங்கள் முதல் 28.05.2023 ஞாயிறு வரை திருப்பலிகளைச் சிறப்பிப்பவர்கள் பேராலயப் பங்கு மக்கள்.

2. இன்று (21.05.2023) நண்பகல் 12.00 முதல் இரக்கத்தின் நேரம் 03.00 வரையில் குழந்தைச் செல்வத்துக்காகக் காத்திருப்போருக்காக பனிமயத் தாயிடம் பரிந்துரைத்து சிறப்பு நோன்பு வழிபாடு நடத்தப்படும். திருப்பலியுடன் இந்த வழிபாடு தொடங்கும். 128 தம்பதியருக்காக மன்றாட்டுகள் ஏறெடுக்கப்படும். உறுதிப்பூசுதல் பெறவிருக்கும் 82 பேரும் இந்த வழிபாட்டில் கலந்துகொண்டு நோன்பின் செப அனுபவம் பெறவேண்டும். இறுதியில் வருகைப் பதிவு எடுக்கப்படும்.

3. எதிர்வரும் 23.05.2023 செவ்வாய் பிற்பகல் 02.00 முதல் 03.00 வரை திருச்சிலுவை சிற்றாலயத்தில் "மகிழ்ச்சி வாழ்வு வாழ்வோம்" என்னும் தலைப்பில் இறைச்செய்தி அருள்பணி. மரியதாஸ் அவர்களால் வழங்கப்படும். தொடர்ந்து குணமளிக்கும் நற்கருணை ஆசீரும், திருப்பலியும் நடைபெறும்.

4. அடுத்த ஞாயிறு (28.05.2023) மாலை 05.00 மணிக்கு நடைபெறும் சிறப்புத் திருப்பலியில் நமது பங்கு மற்றும் பிற பங்குகளைச் சேர்ந்த 82 இளையோர் மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகையின் திருக்கரங்களால் உறுதிப்பூசுதல் அருள்சாதனம் பெறவிருக்கிறார்கள். இதை முன்னிட்டு நற்கருணை ஆசீர் நடைபெறாது. திருப்பலி 05.00 மணிக்குத் தொடங்கும் என்பதைக் கவனிக்கவும். இத்திருப்பலி நமது ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும், சூர்யா மற்றும் யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பாகும்.

5. உறுதிப்பூசுதல் பெறுவோருக்கான ஒப்புரவு அருள்சாதன வழிபாடு 27.05.2023 சனி மாலை 04.00 மணிக்கு நடைபெறும். உறுதிப்பூசுதல் பெறுவோர் தங்கள் பெற்றோருடன் இந்த வழிபாட்டில் கலந்துகொள்ளவும். வரும்பொழுது குடும்ப அட்டை கொண்டுவந்து உறுதிப்பூசுதல் நாளை அதில் பதிவு செய்துகொள்ளுங்கள்.

6. செயின்ட் இனிகோ தொழிற்பள்ளியில் 10, 12ஆம் வகுப்பு தேறிய, தவறிய மாணவர்களுக்கு சிறப்பு தொழிற் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. விபரங்களுக்கு TMSSS ஐ அணுகவும்.

7. எதிர்வரும் 27, 28 (சனி, ஞாயிறு) இரு நாள்களும் மங்கலகிரி டிவைன் மெர்சி தியான இல்லத்தில் தூய ஆவியாரின் அருள்பொழிவு தியானம் நடைபெறும். ஆர்வமுள்ளவர்கள் குடும்பத்துடன் கலந்துகொள்ளவும்.

தங்கத் தேர்ப் பெருவிழா தொடர்பான அறிவிப்புகள்

8. தங்கத் தேர்ப் பெருவிழாவின் ஆசிகளில் ஒன்றாக தூத்துக்குடி மறைமாவட்ட நூற்றாண்டு விழாவுக்காக தூத்துக்குடி வருகை தரும் திருத்தந்தையின் இந்தியத் தூதுவர் மேன்மைமிகு பேராயர் லியோபோல்டோ ஜிரெல்லி அவர்கள் நமது பனிமய அன்னையின் பேராலயம் வருகை தரவிருக்கிறார்கள். 11.06.2023 ஞாயிறு காலை 09.30 மணிக்கு பனிமய அன்னை பேராலயத்தில் திருத்தந்தையின் இந்தியத் தூதுவர் அவர்கள் திருப்பலி நிறைவேற்றுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 2000ஆம் ஆண்டைத் தொடர்ந்து, 23 ஆண்டுகளுக்குப் பிறகு திருத்தந்தையின் தூதுவர் நமது பேராலயத்துக்கு வருகை தருவது நம் அனைவருக்கும் பெருமை தருகிறது. இந்தத் திருப்பலியில் கலந்துகொண்டு, பனிமயத் தாயின் பெயரால் திருத்தந்தையின் தூதுவரை வரவேற்க உங்களை அன்புடன் அழைக்கிறேன்.

9. தங்கத் தேர் திருப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நேற்றுடன் 209 நாள்கள் தச்சு வேலையும், 30 நாள்கள் அலங்காரப் பணியும் நடைபெற்றுள்ளன. இதுவரையில் தங்கத் தேர்த் திருப்பணிகளுக்காக ஆன மொத்த செலவு ரூ. 1,84,00,000 (ஒரு கோடியே எண்பத்து நான்கு இலட்ச ரூபாய்). இதுவரையில் வந்துள்ள மொத்த நன்கொடை ரூ. 58,00,000 (58 இலட்ச ரூபாய்). நன்கொடையாளர்களுக்கு அன்னையின் ஆசி வேண்டி ஒவ்வொரு நாளும் மன்றாடுகிறோம்.

10. தங்கத்தேர் ஆசிகளுக்கான 300 நாள் தொடர் பரிந்துரை மன்றாட்டு இன்று 239 ஆம் நாள். இந்தத் தொடர் மன்றாட்டு தற்பொழுது அந்தோனியார், மணல் மாதா, குழந்தை தெரசா ஆகிய மூன்று அன்பியங்களிலும் நடைபெற்று வருகிறது. பனிமய அன்னையைத் தங்கள் இல்லங்களில் வரவேற்று, தங்கத் தேர்த் திருப்பணிகளுக்காக ஒவ்வொரு நாளும் செபிக்கின்ற அனைவருக்கும் என் பாராட்டுகளையும், ஆசிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

11. தங்கத்தேர் ஆசிகளுக்கான 100 நாள் தொடர் பரிந்துரை மன்றாட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இன்று 38ஆவது நாள். மொத்தம் 220 பேர் (157 நமது பங்கு, 63 பிற பங்குகள், ஊர்கள்) இத்திட்டத்தில் சேர்ந்து தங்கள் இல்லங்களிலேயே செபித்து வருகிறார்கள். இவர்கள் 100 நாள்களும் இடைவெளி விட்டுவிடாமல் தவறாது நாள்தோறும் மன்றாடக் கேட்டுக்கொள்கிறேன்.

12. தங்கத் தேர்ப் பெருவிழா வினா- விடைப் போட்டி எதிர்வரும் ஜுலை மாதம் நடைபெறும். இந்தப் போட்டிக்கான கேள்விகளும், விடைகளும் ஏப்ரல், மே, ஜுன், ஜுலை நான்கு மாத பனிமய இதழ்களில் வெளியிடப்படும். இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்புகிறவர்கள் இப்போதே இக்கேள்வி-பதில்களைப் படித்து தயார் செய்துகொள்ளுங்கள்.

13. இறைவனின் திருவருளால் எதிர்வரும் 20.08.2023 ஞாயிறு அன்று நமது பேராலயத்தில் நடைபெறவுள்ள தஸ்நேவிஸ் மாதா இலவச கூட்டுத் திருமணத்திற்கு 25 மண இணையர்கள் பெயர்ப் பதிவு செய்து விட்டார்கள். எனவே, இனிமேல் யாரும் விண்ணப்பிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

14. இந்த வாரம் பேராலயத்தைச் சுத்தம் செய்வோர்.

- 22 திங் சவேரியார் அன்பியம்
- 23 செவ் செபஸ்தியார் அன்பியம்
- 24 புதன் சிந்தாத்திரை அன்பியம்
- 25 வியா சிறுமலர் அன்பியம்
- 26 வெள்ளி சூசையப்பர் அன்பியம்
- 27 சனி திருச்சிலுவை அன்பியம்
- 28 ஞாயிறு வியாகுல மாதா அன்பியம்

15. கடந்த ஞாயிறு திருப்பலி காணிக்கை ரூ. 63, 470.

அருள்பணி. குமார்ராஜா
பங்குத் தந்தை

குழந்தைச் செல்வத்துக்காகப் பனிமய அன்னையிடம் 7 நாள் தொடர் மன்றாட்டு

பனிமயத் தாயே, பாவிகளுக்கு அடைக்கலமே, மிகவும் இரக்கமுள்ள தாயே, உம்முடைய பிள்ளைகளின் மன்றாட்டுக்குக் கனிவுடன் செவிசாய்ப்பீராக. ஓ மிகவும் அழகுவாய்ந்த மலரே, கனி தரும் திராட்சைச் செடியே, விண்ணகப் பேரொளியே, அமல உற்பவியே, எங்கள் தேவையில் உம்மைத் தேடிவருகிறோம். எங்களுக்கு உதவி செய்யும் அம்மா.

ஓ பெருங்கடலின் விண்மீனே, எங்களுக்குப் பரிவு காட்டி நீரே எம் அன்னை என்பதைக் காண்பியும். ஓ, இறைவனின் தாயே, விண்ணக மண்ணக அரசியே, எங்கள் இதயத்தின் ஆழத்திலிருந்து உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம். உம் உதவியை நாடும் எங்களுக்கு செவி சாய்த்து, உம் பிள்ளைகளுக்கு குழந்தைச் செல்வத்தைப் பெற்றுத் தருவீராக.

*அடைக்கலத் தாயான பனிமய அன்னையே, எங்களுக்காக இயேசுவிடம் மன்றாடும் - 3* ஆமென்.

# தூய பனிமய அன்னை பேராலயம், தூத்துக்குடி

## வார வழிபாட்டு நிகழ்வுகள் - 206

| நாள் | காலை | மாலை |
|---|---|---|
| ஞாயிறு<br>21.05.2023 | ஆண்டவரின் விண்ணேற்றப் பெருவிழா<br>05.00 திருப்பலி<br>06.30 திருவிழாத் திருப்பலி<br>08.00 திருப்பலி<br>09.30 ஆங்கிலத் திருப்பலி<br>12.00- 03.00 திருப்பலி தொடர்ந்து நோன்பு வழிபாடு (31) ("குழந்தை செல்வத்துக்காக") | 05.30 திருப்பலி<br>06.30 மே மாத வணக்கம், நற்கருணை ஆசீர் |
| திங்கள்<br>22.05.2023 | 05.30 திருப்பலி<br>06.30 திருப்பலி | 05.30 திருப்பலி<br>06.30 மே மாத வணக்கம், நற்கருணைஆசீர் |
| செவ்வாய்<br>23.05.2023 | 05.30 திருப்பலி<br>06.30 திருப்பலி<br>02.00 நற்செய்தி வழிபாடு (திருச்சிலுவை சிற்றாலயம்) | 05.30 திருப்பலி<br>06.30 மே மாத வணக்கம், நற்கருணைஆசீர் |
| புதன்<br>24.05.2023 | 05.30 திருப்பலி<br>06.30 திருப்பலி<br>10.00 திருமணத் திருப்பலி (2) | 05.30 திருப்பலி<br>06.30 மே மாத வணக்கம், நற்கருணைஆசீர் |
| வியாழன்<br>25.05.2023 | 05.30 திருப்பலி<br>06.30 திருப்பலி<br>10.00 திருமணத் திருப்பலி (1) | 05.30 திருப்பலி<br>06.30 மே மாத வணக்கம், நற்கருணைஆசீர் |
| வெள்ளி<br>26.05.2023 | 05.30 திருப்பலி<br>06.30 திருப்பலி<br>10.00 திருமணத் திருப்பலி (1)<br>12.00 – 02.00 திருச்சிலுவை அன்புணவு | 05.30 திருப்பலி (திருச்சிலுவை சிற்றாலயம்)<br>06.30 மே மாத வணக்கம், நற்கருணைஆசீர் |
| சனி<br>27.05.2023 | 05.30 திருப்பலி<br>06.30 திருப்பலி<br>10.00 திருப்பலி (திருச்சிலுவை சிற்றாலயம்)<br>11.00 செபமாலை, நவநாள் திருப்பலி | 04.30 ஒப்புரவு அருள்சாதனம்<br>05.30 திருப்பலி<br>06.30 செபமாலை, பனிமய அன்னை நவநாள், திவ்ய நற்கருணை ஆசீர் |
| ஞாயிறு<br>28.05.2023 | தூய ஆவியார் பெருவிழா<br>05.00 திருப்பலி<br>06.30 திருவிழாத் திருப்பலி<br>08.00 திருப்பலி<br>09.30 ஆங்கிலத் திருப்பலி<br>திருமுழுக்கு (1) | 05.00 உறுதிப்பூசுதல் திருப்பலி |